செய்தி வெளியீடு எண்: 398 நாள் : 12.08.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (12.8.2015) தலைமைச் செயலகத்தில், இந்திய கடலோர காவல்படைப் பணியின் போது மறைந்த இளம் வீரர்களான திரு. வித்யாசாகர், திரு. எம்.கே. சோனி, திரு. சுபாஷ் சுரேஷ் ஆகியோரது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைக் கண்காணித்து பாதுகாப்பதில் தமிழக காவல்துறையுடன் இணைந்து இந்திய கடலோர காவல்படை செயல்பட்டு வருகிறது. இயற்கை சீற்றங்களின் போதும், ஆழ் கடலில் மீன் பிடிக்கும் போதும் ஏற்படும் இடர்பாடுகளினாலும் ஆபத்தில் சிக்கித் தவிக்கும் தமிழக மீனவர்களை விரைவாகவும், பாதுகாப்பாகவும் மீட்டு வருவதிலும், நமது எல்லைக்குள்ளான கடல் பகுதிகளில் பிற மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதைத் தடுத்து நமது மீன்வளத்தையும், மீனவர்களையும் பாதுகாப்பதில் சென்னையைத் தலைமையிடமாக கொண்டு செயல்படும் கிழக்கு மண்டல (தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திர மாநிலம்) இந்திய கடலோர காவல் படையினரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அத்தகைய சிறப்பு மிக்க இந்திய கடலோர காவல் படையை சேர்ந்த இளம் வீரர்களான திரு. வித்யாசாகர், திரு. எம்.கே. சோனி, திரு. சுபாஷ் சுரேஷ் ஆகியோர் கடந்த 8.6.2015 அன்று டார்னியர் ரக சிறிய விமானம் மூலம் கடலோர காவல் கண்காணிப்பு ஒத்திகை பணியில் ஈடுபட்டிருக்கும் போது விமானத்துடன் காணாமல் போயினர். நீண்ட நெடிய தேடுதலுக்குப் பிறகு காணாமல் போன வீரர்களின் எலும்புகள் கடலுக்கடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு உரிய பரிசோதனைகளுக்குப் பின்னர் மூன்று இந்திய கடலோர காவல் படை வீரர்களின் மறைவு உறுதி செய்யப்பட்டிருப்பதை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மிகுந்த மனவேதனை அடைந்ததோடு, உயிரிழந்த அப்படை வீரர்களின் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, அவ்வீரர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று 10.8.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, பணியின் போது உயிரிழந்த இந்திய கடலோர காவல்படை வீரர் திரு. எம்.கே. சோனி அவர்களின் மனைவி திருமதி அம்ருதா சோனி அவர்களிடமும், திரு. சுபாஷ் சுரேஷ் அவர்களின் மனைவி திருமதி தீபலட்சுமி ரவிச்சந்திரன் அவர்களிடமும், திரு. வித்யாசாகர் அவர்களின் மனைவி திருமதி டி. சுஷ்மா அவர்கள் சார்பில் கமாண்டன்ட் திரு. சந்திரமௌலி மற்றும் கடலோர காவல்படை இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ்.பி. ஷர்மா ஆகியோரிடமும், தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி, ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட இந்திய கடலோர காவல்படை வீரர்களின் குடும்பத்தினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 12.8.2015**